O.S. No. 43/2007 Dt. 21.07.2022.
PW1 – திரு. ராஜகோபால்
முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு கூடுதல் சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி நிரூபண வாக்குமூலம் நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை எனது நீதிமன்ற முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

எனது தரப்பில் குறியீடு செய்யப்பட வேண்டிய கூடுதல் ஆவணங்கள்...

| | |
|---|---|
| 1 | 11.06.2007 ம் தேதி WP9280/2006 என்ற ரிட் மனுவில் ஏற்பட்ட உத்தரவின் உண்மை நகல் **வா.சா.ஆ.9 ஆகும்.** **(இந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி 1வது சாட்சி தரப்பில் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)** |
| 2 | தாவா சொத்திற்கான அடங்கல் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10 ஆகும்.** **(இந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி 1வது சாட்சி தரப்பில் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)** |
| 3 | தாவா சொத்திற்கான 1418 ம் ஆண்டு பசலிக்கான 10(1) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11 ஆகும்.** **(இந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி 1வது சாட்சி தரப்பில் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)** |
| 4 | 20.02.1978 ம் தேதி வாதியும், லிங்கம் என்பவரும் எழுதிக்கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12 ஆகும்.** **(இந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி 1வது சாட்சி தரப்பில் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)** |
| 5 | 30.09.1981 ம் தேதி வாதியும், தங்கவேலும் எழுதிக்கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13 ஆகும்.** **(இந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி 1வது சாட்சி தரப்பில் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)** |

| | |
|---|---|
| 6 | தொண்டி புதுக்குடி சர்வே எண்.53/1 க்கு சம்பந்தமாக இராமநாதபுரம் வருவாய் கோட்டாசியர் நீதிமன்றத்தில் நக.அ 4/2845/2012 ல், 30.05.2012 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு **வா.சா.ஆ.14 ஆகும்**.<br>**(இந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி 1 வது சாட்சி தரப்பில் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)** |